1992 ஏப்ரல் 1]

(அ) தமிழ்நாட்டில் இதுவரை 69 ஊராட்சி ஒன்றியங்களில் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டம் அமல்படுத்தப்பட்டுள்ளது.

(ஆ) இத்திட்டத்தின்கீழ் ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியப் பகுதியிலும் குழந்தைகளின் எண்ணிக்கைக்கேற்ப அதிகபட்சமாக 100 மையங்கள் திறக்கப்படுகின்றன. ஒவ்வொரு மையத்திலும் இரண்டு அங்கன்வாடி பணியாளர்களும் ஒரு உதவியாளரும் பணியமர்த்தப்படுகின்றனர். மேலும் ஒவ்வொரு திட்டப்பகுதியிலும் (ஊராட்சி ஒன்றியம்) ஒரு குழந்தைகள் வளர்ச்சித் திட்ட அலுவலரும் நான்கு மேற்பார்வையாளர்களும் உள்ளனர்.

(இ) நடப்பு ஆண்டில் இத்திட்டம் 26 ஊராட்சி ஒன்றியங்களில் அமலாக்கப்படுகின்றது.

433—

பூம்புகார் தொகுதியில் மைதா தொழிற்சாலை.

*3304—திரு. எம். பூராசாமி :

மாண்புமிகு ஊரகத்தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) பூம்புகார் தொகுதியில் அதிகமான அளவு மரவள்ளிக் கிழங்கு பயிரிடப்படுவதால் இங்கு மைதா மாவு, ஜவ்வரிசி போன்றவை தயாரிக்க ஒரு தொழிற்சாலை அமைக்க அரசு முன்வருமா ?

(ஆ) ஆம் எனில், இத்தொழிற்சாலை விரைவில் அமைக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. எஸ். நாகூர்மீரான் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) வினா எழ வாய்ப்பில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் நேரம் முடிவுற்றது.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.)

முற்பகல் 10-30

2. அறிவிப்பு.

சென்னைப் பல்கலைக்கழக ஆட்சிமன்றக் குழுவிற்கு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு.

1992 ஏப்ரல் 1] [பேரவைத் தலைவர்]

சென்னைப் பல்கலைக் கழகத்தின் ஆட்சிமன்றக் குழுவிற்கு–செனட்- தமிழ்நாடு சட்டப் பேரவை உறுப்பினர்களிலிருந்து அறுவரைத் தேர்ந்தெடுக்க ஏற்பாடு செய்யுமாறு சென்னைப் பல்கலைக் கழகம் கோரியுள்ளது. தேர்ந்தெடுக்கப்படுவோர்களின் பதவிக் காலம் 2—5—1992 முதல் 3 ஆண்டுகள் ஆகும். இருப்பினும் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் ஏதாவது ஒரு காரணத்திற்காகப் பேரவை உறுப்பினர் பதவியை இழக்க நேரிட்டால் அந்த நாளோடு இப்பதவிக்காலம் முடிவடையும். வேட்பாளர்கள் நியமனத் தாள்கள் 14—4—1992 செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணிக்குள் பேரவைச் செயலாளரிடம் சேர்ப்பிக்க வேண்டும். நியமனத் தாள்கள் வேண்டுவோர் செயலாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம். நியமனத் தாட்கள் 15–4–1992 புதன்கிழமை பிற்பகல் 3 மணிக்குப் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும். விலகிக்கொள்ள விரும்புகிற வேட்பாளர்கள் 16—4—1992 வியாழக்கிழமை பிற்பகல் 3 மணிக்குள் விலகிக்கொள்ளலாம். நியமனம் செய்யப்பட்ட வேட்பாளர்களின் எண்ணிக்கை வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு மேற்படுமாயின் 20—4—1992 திங்கட்கிழமை காலை 9-30 மணிக்கும் பிற்பகல் 1 மணிக்கும் இடையே தலைமைச் செயலகத்தில் உள்ள சட்டமன்றக் குழுக்கள் கூடும் அறையில் வாக்கெடுப்பு நடைபெறும்.

3. கவன ஈர்ப்பு.

(அ) சென்னை நகரில் கொசுத் தொல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்த கவன ஈர்ப்பு. திரு. டி. சுதர்சனம் அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். திரு. டி. சுதர்சனம்.

திரு. டி. சுதர்சனம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''சென்னை நகரில் கொசுத் தொல்லை அதிகமாகியுள்ளது குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, விவர அறிக்கை ஒன்று அவையின்முன் வைக்கப்பட்டிருக்கிறது.